Annex -01

ORIGINAL

22

**ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணிக்கான யாப்பு**
**(வரைபு)**

கூட்டமைப்பின் பெயர் : ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி

**1. குறிக்கோள்:**

தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையிலும், இலங்கையின் வடக்கு கிழக்கு என்பது தமிழ் மக்களின் மரபு வழி தாயகம் என்ற அடிப்படையிலும், அவர்கள் தனித்துவமான மொழி, கலாச்சாரம், பண்பாடுகளைக் கொண்டவர்கள் என்ற அடிப்படையிலும், தங்களுக்கே உரித்தான பொருளாதார வளங்களைக் கொண்டவர்கள் என்ற அடிப்படையிலும், சர்வதேச சட்டங்களின் பிரகாரமும் தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள், அது அவர்களின் பிறப்புரிமை எனும் அடிப்படையில் தமிழ்த் தேசிய இனப் பிரச்சினைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வினைக் காண்பதில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது.

**2. கொள்கை:**

2.1: இலங்கை பல்லின, பல்மொழி, பல்கலாச்சார மற்றும் பல மதங்கள் உள்ளடக்கிய நாடு என்பதனை ஏற்றுக்கொண்டு, இனங்களுக்கிடையில் சமத்துவம் கௌரவம் மற்றும் இனங்களின் தனித்துவத்தை ஏற்றுக்கொண்டு, அவற்றை முன்னெடுத்துச் செல்வதற்கான நடவடிக்கைகளை தமிழ் தேசியக் கூட்டமைப்பு மேற்கொள்ளும்.

2.2: சமஷ்டி முறையிலான ஒரு அரசமைப்பானது, தேசிய இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான பொறிமுறைகளை உருவாக்குவதற்கு வழிகோலும் என்ற அடிப்படையில், இலங்கையில் சமஷ்டி முறையிலான அரசியல் சாசனம் ஒன்றை உருவாக்குவதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஒத்துழைப்பு வழங்கும்.

2.3: வடக்கு கிழக்கில் வாழும் சகல மக்களுக்குமான ஜனநாயக உரிமைகளை பேணிப்பாதுகாத்தலும் அதனை உத்தரவாதப்படுத்தலும்.

2.4: வடக்கு கிழக்கில் இயங்கும் சகல மதப்பிரிவுகளும் தமது மதத்தை பின்பற்றுவதற்கும் வழிபடுவதற்குமான சுதந்திரத்தை பாதுகாத்தல்.

2.5: அரசியல் சாசனத்தில் குறித்தொதுக்கப்பட்ட வகையில் சகல மக்களுக்குமான அடிப்படைஉரிமைகளை உத்தரவாதப்படுத்தல்.

2.6: கூட்டமைப்பின் நோக்கங்களை நிறைவேற்றுவதை இலக்காகக் கொண்டு, வெளிநாடுகளில் வாழும் புலம்பெயர் தமிழ்ச் சமூகம் மத்தியில் எமது இலக்குகளை தெளிவுபடுத்தி முன்னெடுத்துச் செல்லும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

2.7: இனப்பிரச்சினைத் தீர்விற்கும் வடக்கு கிழக்கு அபிவிருத்திக்கும் சர்வதேச நிபுணர்களின் உதவிகளையும் ஒத்தாசைகளையும் பெற்றுக் கொள்ளல்.

2.8: எமது குறிக்கோள் மற்றும் கொள்கைகளை வென்றெடுக்க ஜனநாயக வழிமுறையிலான சகல நடவடிக்கைகளையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொள்ளும்.

**3. உறுப்புரிமை:**

3.1: இந்தக் கூட்டமைப்பானது, இதில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு அரசியல் கட்சியினதும், அரசியல் ஸ்தாபனங்களினதும், தனிநபர்களினதும் சுயவிருப்பின் பேரிலேயே கூட்டாக செயற்படுகிறது. இக் கூட்டமைப்பின் குறிக்கோள், கொள்கை மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் யாப்பின் விதிமுறைகளை ஏற்றுக் கொள்வோர் இதில் அங்கத்தவராகலாம்.

3.2: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஸ்தாபக அங்கத்தவர்களாக தமிழீழ விடுதலை இயக்கம், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ் தேசியக் கட்சி, ஜனநாயக போராளிகள் கட்சி ஆகியோர் அடங்குவர்.



CamScanner

3.3: மேற்கண்ட குறிக்கோளையும், கொள்கைகளையும் ஏற்றுக்கொண்ட அரசியல் கட்சிகள், அரசியல் ஸ்தாபனங்கள், தனிநபர்கள் இதில் இணைய விரும்பும் பட்சத்தில் நிறைவேற்றுக்குழுவின் முழுமையான ஆதரவுடனோ அல்லது நிறைவேற்றுக்குழுவின் பெரும்பான்மை ஆதரவுடனோ இக்கூட்டமைப்பில் இணைந்து பணியாற்றலாம்.

3.4: இக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளினது அல்லது அரசியல் ஸ்தாபனங்களினது அங்கத்தவர்கள் கூட்டமைப்பின் அங்கத்தவர்களாக கணிக்கப்படுவர்.

3.5: அரசியல் நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில், கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகள் மற்றும் ஸ்தாபனங்கள் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி என்னும் கட்சியாக செயற்படும்.

3.6: இதில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகள் தனித்தியங்குவதற்கு அவர்களுக்கு முழுமையான சுதந்திரம் உண்டு. அதே சமயம் தனித்தியங்குவதென்பது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் குறிக்கோள் மற்றும் கொள்கைகளுக்கு பாதகமாக அமைந்து விடக்கூடாது.

**4. நிறைவேற்றுக்குழு:**

அ. நிறைவேற்றுக்குழுவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சகல தீர்மானங்களையும் மேற்கொள்ளும் அதியுயர் பீடமாகும். இந்த நிறைவேற்றுக்குழுவுக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளிலிருந்து உறுப்பினர்கள் நியமிக்கபபடுவர்.

ஆ. நிறைவேற்றுக்குழுவுக்கான உறுப்பினர்களை அங்கத்துவக் கட்சிகள் ஒவ்வொன்றும் பரிந்துரை செய்யும்.

இ. ஒவ்வொரு அங்கத்துவக் கட்சியும் மூன்று அங்கத்தவர்களை இந்த நிறைவேற்றுக்குழுவுக்கு நியமிக்கும்.

ஈ. தீர்மானங்களை மேற்கொள்ளும் அதியுயர் சபையில் (நிறைவேற்றுக்குழுவில்) பெண்களும் இடம்பெற வேண்டும் என்ற அடிப்படையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு கட்சியும் நான்காவது உறுப்பினராக ஒரு பெண் அங்கத்தவரை பரிந்துரை செய்யலாம்.

**4.1: நிறைவேற்றுக்குழுவின் நடவடிக்கைகள்:**

அ. இந்த நிறைவேற்றுக்குழுவானது தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கக்கூடிய கட்சிகளின் தலைவர்களை உள்ளடக்கிய இணைத்தலைமையைக் கொண்டதாக அமையும். மேலும் இந்த நிறைவேற்றுக்குழுவானது கட்சிக்கான பொதுச்செயலாளர், இணைச் செயலாளர்கள், பொருளாளர், பேச்சாளர், தேசிய அமைப்பாளர் ஆகியோரை தெரிவு செய்யும்.

ஆ. இவர்களது கடமைகாலம் இரண்டு வருடங்களாக இருக்கும்.

இ: மேற்கண்ட உத்தியோகத்தர்களை தெரிவு செய்யும் போது சகல கட்சிகளுக்கும் தலைமைத்துவத்தில் வாய்ப்பளிக்கக்கூடிய வகையில் இயன்றவரை அனைத்துக் கட்சிகளினது பிரதிநிதிகளும் பங்குகொள்ளக் கூடியதாக அமைய வேண்டும்.

ஈ: கட்சிக்கான நிதியைக் கையாளும் பொருளாளர் தலைமையில் நிதிக்குழு ஒன்று அமைக்கப்படும். இந் நிதிக்குழுவில் அங்கத்துவக் கட்சிகளின் பிரதிநிதிகள் அங்கம் வகிப்பர்.

உ: வங்கிகளின் காசோலைகளை கையாள்வதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பொருளாளரும், பொதுச் செயலாளரும் ஒப்பமிடுவதற்கு தகுதியுடையவர்கள்.

ஊ: அரசாங்கத்துடனான பேசுவார்த்தைகளைக் கையாளுதல், புலம்பெயர் அமைப்புகளுடன் உறவுகளைப் பேணுதல், மீள்குடியேற்றம், வாழ்வாதாரங்களை ஒழுங்குபடுத்தல், காணி நிலங்களை விடுவித்துப் பாதுகாத்தல், தமிழ் கலாசாரம் பண்பாடு போன்றவற்றை ஊக்குவித்தல், வடக்கு கிழக்கில் இருக்கும் புராதன சின்னங்களையும் தொல்பொருள் இடங்களையும் அதன் தொன்மை மாறாமல் பாதுகாப்பதற்கான குழுக்களையும் உபகுழுக்களையும் பொருத்தமானவர்களைக் கொண்டு நிறைவேற்றுக்குழு நியமிக்கும்.



CamScanner

எ: நிறைவேற்றுக்குழுவானது குறைந்த பட்சம் மாதமொருமுறை கூடி, அரசியல் சூழ்நிலை தொடர்பாக முடிவுகளை எடுப்பதுடன் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

ஏ: நிறைவேற்றுக்குழுவில் இருந்து ஒருவர் நீக்கப்பட்டாலோ பதவி விலகினாலோ ஏற்படும் வெற்றிடத்திற்கு உரிய கட்சி தனது உறுப்பினரை புதிதாக நியமிக்கும்.

ஐ: நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களின் பதவிக்காலம் ஒரு வருடமாகும். ஒரு வருட முடிவில் அக் கட்சிகள் அதே நபரையோ அல்லது கட்சி சார்பில் வேறொருவரையோ நிறைவேற்றுக்குழு உறுப்பினராக நியமிக்கலாம்.

**4.2: இணைத் தலைமையின் பணிகள்:**

அ: இணைத் தலைமைகளில் ஒருவர் நிறைவேற்றுக்குழுக் கூட்டத்திற்கு தலைமை தாங்குவார்.

ஆ: அங்கத்துவக் கட்சிக்குள் முரண்பாடுகள் ஏற்படாமல் கவனித்து ஐக்கியத்தைப் பலப்படுத்தும் முயற்சிகளை மேற்கொள்வார்.

இ: ஜனநாயக விழுமியங்களை மதித்து அனைத்து உறுப்பினர்களுக்கும் சம வாய்ப்புகள் வழங்கப்படுவதை உறுதிசெய்வார்.

**4.3: செயலாளரின் பணிகள்:**

அ: நிறைவேற்றுக்குழுவின் தீர்மானங்கள் அனைத்தையும் நடைமுறைப்படுத்துவதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வார்.

ஆ: நிறைவேற்றுக்குழுவின் மாதாந்தக் கூட்டங்களை கூட்டுவதுடன் கூட்ட அறிக்கைகளையும் தயார் செய்து அடுத்த கூட்டத்தில் வாசிப்பார்.

இ: தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளிடையில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துதல்.

ஈ: தேர்தல் ஆணையகம் தொடர்பான சகல ஆவணங்களையும் பராமரித்தல், பங்குபற்றல், அது தொடர்பான அறிக்கைகளை நிறைவேற்றுக்குழுவுக்கு சமர்பித்தல்.

**4.4: பொருளாளரின் பணிகள்:**

அ: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிறைவேற்றுக்குழு பொருளாளரை நியமிப்பதுடன் அவரது தலைமையில் ஒரு நிதிக்குழுவையும் நியமிக்கும்.

ஆ: பொருளாளரும் நிதிக்குழுவும் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கான நிதி வளங்களை உருவாக்குவதுடன் அவற்றைப் பேணிப் பராமரிக்கும்.

இ: பொருளாளர் ஆறு மாதத்திற்கு ஒருமுறை நிதிநிலை அறிக்கை ஒன்றை நிறைவேற்றுக்குழுவுக்கு சமர்ப்பிப்பார்.

**4.5: உத்தியோகபூர்வ பேச்சாளர்:**

அ: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிறைவேற்றுக்குழுவானது கட்சிக்கான உத்தியோகபூர்வ பேச்சாளர் ஒருவரை நியமிக்கும்.

ஆ: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவரோ செயலாளரோ கூட்டமைப்பின் கொள்கை நோக்கம் அரசியல் நிலவரங்கள் தொடர்பாக கருத்துக் கூறும் உரிமை உடையவர்கள்.

இ: உத்தியோகபூர்வ பேச்சாளரானவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கை நோக்கங்களில் இருந்து வழுவாமலும் நிறைவேற்றுக்குழுவின் தீர்மானங்களை ஒட்டியும் கருத்துகளை வெளியிடுவார்.

ஈ: உத்தியோகபூர்வ பேச்சாளருக்கான பதவி வெற்றிடமேற்படுமிடத்து நிறைவேற்றுக்குழு கூடி அந்த வெற்றிடத்துக்கு புதியவரை நியமிக்கும்.



CamScanner

**4.6: தேசிய அமைப்பாளர்:**

அ: தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நிறைவேற்றுக்குழுவானது கட்சியின் தேசிய அமைப்பாளராக ஒருவரைத் தெரிவு செய்யும். தேசிய அமைப்பாளரானவர் தனது பணிகளை இலகுவாக்கும் பொருட்டு மாகாண அமைப்பாளர்களை நியமிக்கலாம்.

ஆ: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கிராம ரீதியாக, வட்டார ரீதியாக, தொகுதி ரீதியாக மற்றும் மாகாண ரீதியில் பலப்படுத்தும் நடவடிக்கைகளை தேசிய அமைப்பாளர் மேற்கொள்வார்.

இ: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தொகுதி, மாகாண மாநாடுகளை நடாத்துவதற்கும் கூட்டமைப்பின் மாநாடுகளையும் நடாத்துவதற்குமான நடவடிக்கைகளை மேற்கொள்வார்.

ஈ: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்புக் கிளைகளான மாணவர், இளைஞர், மகளிர், தொழிற்சங்க அணிகளை உருவாக்கும் கடமைகளை மேற்கொள்வார்.

**5. தலைமைச் செயலகம்:**

அ: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கான தலைமைச் செயலகம் ஒன்று நிறுவப்படும்.

ஆ: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சகல ஆவணங்களையும் தயார் செய்யும் நிலையமாகவும் ஒருங்கிணைக்கும் மையமாகவும் இது செயற்படும்.

இ: இதற்குத் தேவையான ஆளணிகளை நிறைவேற்றுக்குழு பொருத்தமானவர்களையும் நிபுணர்களையும் கொண்டு நியமிக்கும்.

ஈ: தமிழ் மக்கள் எதிர்நோக்கும் சகல பிரச்சினைகளையும் கையாளும் ஒரு நிலையமாகவும் இது செயற்படும்.

உ: தலைமைச் செயலகத்தின் நிர்வாகங்களை நெறிப்படுத்தி நிர்வகிப்பதற்காக அனுபவம் வாய்ந்த நிர்வாகி ஒருவரை தலைமைச் செயலகத்தின் நிர்வாகச் செயலாளராக நிறைவேற்றுக்குழு நியமிக்கும்.

**6. ஒழுங்காற்றுக்குழு:**

அ: தமிழ் தேசியக் கூட்டமைப்பானது தனக்கான ஒழுக்கம் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான வரையறைகளை வகுத்து அங்கத்துவக் கட்சிகளுக்கும் ஸ்தாபனங்களுக்கும் வழங்கும்.

ஆ: நிறைவேற்றுக்குழுவானது தேவைகளுக்கேற்ப ஒழுங்காற்றுக்குழுவை நியமிக்கும்.

இ: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒழுக்கக் கட்டுப்பாடு விதிகளை மீறுகின்ற நபர்கள் அல்லது கட்சியின் மீது தான் நியமித்த குழுவின் மூலம் நிறைவேற்றுக்குழு ஒழுங்காற்று விசாரணைகளை முன்னெடுக்கும்.

ஈ: இந்த விசாரணையின் அடிப்படையில் நிறைவேற்றுக்குழு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

K.N.Ratnalinkham
Secretary
Democratic Tamil National Alliance



CamScanner

Annex-01 (Translation

# DRAFT CONSTITUTION OF DEMOCRATIC TAMIL NATIONAL ALLIANCE

**NAME OF ALLIANCE:** Democratic Tamil National Alliance

## 1. OBJECTIVES:

Democratic Tamil National Alliance will be committed to find a permanent political solution to the Tamil National question which recognizes that the North and East of Sri Lanka as the traditional homeland of the Tamil people, they possess a distinct language and culture, they have their own economic resources, and they are entitled to self-determination under international laws, and to develop the economic well being of the Tamil people of the North and East.

## 2. POLICY:

2.1: Democratic Tamil National Alliance recognizes the fact that Sri Lanka is a multiethnic, multilingual, multicultural and multireligious country. The Alliance will contribute to the cause of promoting equality and dignity among the distinct ethnic groups.

2.2: The Alliance will cooperate with the task of formulating a federal constitution in Sri Lanka given the fact that a federal constitution will pave the way for the creation of mechanisms towards a solution to the national question.

2.3: The Alliance will safeguard and guarantee the democratic rights of all the inhabitants of the North and East.

2.4: The Alliance will safeguard the freedom of all the religious groups active in the North and East to practise and observe their religion.

2.5: The Alliance will guarantee the fundamental rights to everybody as prescribed in the constitution.

2.6: The Alliance will promote and fulfill its objectives by explaining them to the Tamil Diaspora.

2.7: The Alliance will secure the assistance and cooperation of international experts towards a solution to the national question and the development of the North and East.

2.8: The Alliance will make all efforts to achieve its objectives and carry out its policies democratically.

## 3. MEMBERSHIP:

3.1: The Alliance will function as a joint entity at the discretion of all the constituent political parties, political organizations and individuals, those who agree with the objectives, policies and provisions of the constitution of Democratic Tamil National Alliance may become its members.

3.2: Founder members of Democratic Tamil National Alliance consist of Tamil Eelam Liberation Organization, Democratic People's Liberation Front, Eelam People's Revolutionary Liberation Front, Tamil National Party and Crusaders for Democracy.

1, 2, 3, 4, 5.



CamScanner

3.3: Those political parties, political organizations and individuals who agree with the above objectives and policies may, if they so desire, join and serve as members of the Alliance with the endorsement of the entire or majority of the Executive Committee.

3.4: Members of the constituent political parties or political organizations of the Alliance will be deemed to be members of the Alliance.

3.5: The constituent political parties and political organizations of the Alliance will function as members of the party of Democratic Tamil National Alliance as far as political activities are concerned.

3.6: The constituent political parties of the. Alliance will enjoy absolute freedom to function as separate entities provided their separate existence will not be detrimental to the objectives and policies of Democratic Tamil National Alliance.

## 4. EXECUTIVE COMMITTEE:

a: The Executive Committee will be the supreme body to make all decisions of Democratic Tamil National Alliance. Members of the Executive Committee will be appointed from the constituent parties of Democratic Tamil National Alliance.

b: Each constituent party will recommend members of the Executive Committee.

c: Each constituent party will appoint three members to the Executive Committee.

d: Each constituent party may recommend a female member on the basis that the supreme decision-making body (the Executive Committee) should include women.

### 4.1 FUNCTIONS OF THE EXECUTIVE COMMITTEE:

a: The Executive Committee will consist of the leaders of the constituent parties of Democratic Tamil National Alliance who exercise joint leadership. The Executive Committee will name the general secretary, joint secretaries, treasurer, spokesperson and national organizer.

b: Their tenure will last two years.

c: The above office-bearers should be named in such a way as to offer an opportunity to the representatives of all the constituent parties to contribute to the leadership.

d: A finance committee consisting of representatives of the constituent parties will be established under the treasurer who handles the funds belonging to the party.

e: The treasurer and general secretary of Tamil National Alliance will have the authority to handle and sign bank cheques.

f) The Executive Committee will name suitable members to committees and subcommittees to handle talks with the government, maintain contacts with Diaspora organizations, resettlement, regulating sources of livelihood, recovery and protection of lands, promoting Tamil culture and preserving ancient monuments and archaeological sites and their antiquity.

g: The Executive Committee will meet at least once a month and make decisions on political situations and take necessary actions.



CamScanner

h: If a member of the Executive Committee is removed or resigned, the constituent party concerned will name one of its members to fill the vacancy.

i: The tenure of a member of the Executive Committee will last one year. The constituent parties may name the same or another member on their behalf to the Executive Committee.

**4. 2 FUNCTIONS OF THE JOINT LEADERSHIP:**

a: One of the joint leaders will preside over the Executive Committee meeting.

b: The joint leader will ensure that no contradictions arise among the constituent parties and make efforts to strengthen unity.

c: The joint leader will respect democratic values and ensure equal opportunity to all the members.

**4. 3 FUNCTIONS OF THE SECRETARY:**

a: The secretary will take all such actions as necessary to implement every decision made by the Executive Committee.

b: The secretary will call the monthly meetings of the Executive Committee, take the minutes at the meeting and read the minutes at the subsequent meeting.

c: The secretary will promote coordination among the constituent parties of Democratic Tamil National Alliance.

d: The secretary will maintain all documentation in relation to the Elections Commission and submit reports on that to the Executive Committee.

e: If the office of secretary falls vacant the Executive Committee will meet and name a new secretary.

**4. 4 FUNCTIONS OF THE TREASURER:**

a: The Executive Committee of Democratic Tamil National Alliance will appoint a treasurer and a finance committee headed by him.

b: The treasurer and the finance committee will work together to create and maintain the financial resources of Democratic Tamil National Alliance.

c: The treasurer will submit a financial statement to the Executive Committee every six months.

**4. 5 OFFICIAL SPOKESPERSON:**

a: The Executive Committee of Democratic Tamil National Alliance will appoint an official spokesperson for the Alliance.

b: The leader or secretary of a constituent party of Democratic Tamil National Alliance will have the right to express their opinions about its policies, objectives and political situations.



CamScanner

c: The official spokesperson will express opinions in conformity with the objectives and policies of Democratic Tamil National Alliance and in accordance with the decisions made by the Executive Committee.

d: If the office of official spokesperson falls vacant the Executive Committee will meet and name a new official spokesperson.

### 4.6 NATIONAL ORGANIZER:

a: The Executive Committee of Democratic Tamil National Alliance will appoint a national organizer for the party. The national organizer may appoint provincial organizers for his convenience in performing his functions.

b: The national organizer will undertake the task of strengthening Democratic Tamil National Alliance at rural, divisional, electorate and provincial levels.

c: The national organizer will undertake the task of holding electorate and provincial meetings of Democratic Tamil National Alliance.

d: The national organizer will undertake the task of establishing a student front, youth front, women front and trade union affiliated to Democratic Tamil National Alliance.

## 5. SECRETARIAT:

a: A secretariat will be set up to function under Democratic Tamil National Alliance.

b: The secretariat will be the centre of documentation and coordination for Democratic Tamil National Alliance.

c: The personnel of the secretariat will consist of suitable persons and experts appointed by the Executive Committee.

d: The secretariat will also be a centre dealing with the issues faced by Tamil people.

e: The Executive Committee will appoint an experienced administrator as administrative secretary to steer and manage the administrative matters of the secretariat.

## 6. DISCIPLINARY COMMITTEE:

a: Democratic Tamil National Alliance will formulate its code of ethics and conduct and provide them to the constituent parties and organizations.

b: The Executive Committee will appoint disciplinary committees on an ad hoc basis.

c: The Executive Committee will ensure that a disciplinary inquiry is conducted by the disciplinary committee appointed by itself against an individual or a constituent party that violates the code of ethics or conduct.

d: The Executive Committee will take necessary actions based on the disciplinary inquiry.

K.N.Ratnalinkham
Secretary
Democratic Tamil National Alliance



CamScanner